[illegible] சங்கம்

# [illegible] TAMIL TEACHER'S UNION

## பிள்ளைகளின் உரிமை
## CHILD RIGHTS




ஆசிரியர்களால்தான் குழந்தைகள் தொழிலில் ஈடுபடுவதற்கு எதிராக சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களென சர்வதேச தொழில் தாபனம் உறுதியாக நம்புகிறது.


**கொழும்பு முகவரி**
**Colombo Office**
"CANADA HOUSE" கனடா இல்லம்
CENTER ROAD, இல. 40, மத்திய வீதி
COLOMBO - 15. கொழும்பு - 15.
SRI LANKA இலங்கை.

**தலைமைப் பணிமனை**
**Head Office**
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
Jaffna.


**EI/ NL/ CTTU/ RELEASE**

**ச[illegible] ம் நோர்வேஜின் ஆசிரியர் சங்கம் இலங்கைத் [illegible] ழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து வெளியீடு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
## கொழும்பு பணிமனை

கனடா இல்லம்
40, மத்திய வீதி,
கொழும்பு -15

# பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள்

## ஒரு பிள்ளையை மனிதனாக உருவாக்குபவர் ஆசிரியரே

ஒரு பிள்ளை தொடர்பாகப் பெற்றோர் மீது சுமத்தப்பட்டுள்ள சட்ட பூர்வமான பொறுப்புக்களை ஒத்த ஒரு தொகுதிப் பொறுப்புக்களை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றார்கள். பிள்ளைகளது எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது ஆசிரியர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் பெற்றோரது பொறுப்புக்களையும் தாண்டிச்செல்லத் தக்கவாறு பலம் பொருந்தியவை என்பது வொட்சன் போன்ற கல்வியியலாளர்கள் குறிப்பிட்ட கருத்துக்களின் வாயிலாகப் புலனாகின்றன.

வொட்சன் போன்ற கல்வியியலாளர்களது கூற்றுக்களால் ஒரு பிள்ளையின் மீது ஒரு ஆசிரியர் கொண்டுள்ள ஆதிக்கம் எத்தனை பலமானது என்பது தெளிவாகிறது. ஒரு தாய் ஒரு பிள்ளையைப் பிரசவித்த பின்னர் பெற்றோர் இணைந்து அதனை வளர்த்து ஆளாக்குகின்றனர். ஆனால் அப் பிள்ளையை முழுமையான ஒரு மனிதனாக உலகிலே உருவாக்குபவர்கள் ஆசிரியர்களேயாவர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையால் பிள்ளைகளது நலனுக்குக் காரணமாக அமையும் ஒரு பணியொழுங்கினை வெற்றிகரமாக்கிக் கொள்ளல் தொடர்பாக ஆசிரியர்களது வழிகாட்டல் அவசியமேயாகும். அவ்வாறே அவர்களது ஆக்கபூர்வமான பங்களிப்பு இது தொடர்பாக வேண்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த நூலிலே அடுத்து வரவிருக்கும் அத்தியாயங்களில் விபரிக்கப்படும். இலங்கைப்பிள்ளைகளது உரிமைகளோடு தொடர்புபட்ட சட்டம் பற்றிய பகுப்பாய்வு, பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாப்பதில் கடப்பாடு கொண்ட ஆசிரியர்களுக்கு அவசியமாகும்.

## பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான பிரதான சட்ட மூலங்கள்

1989 நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கிகரிக்கப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் (Convention on the Rights of the Child ) உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய முக்கியமான சட்டமூலாதாரமாகும். இவ் ஒப்பந்தம் அங்கிகரிக்கப்படும் முன்னர் பிள்ளைகளது உரிமைகளோடு தொடர்புபட்ட உலகளாவிய இரண்டு பிரகடனங்கள் 1924ல் நாடுகளின் சங்கத்தாலும் 1948ல் ஐக்கிய நாடுகள் சபையாலும் அங்கிகரிக்கப்பட்ட போதும் அவை பிரகடனங்களேயன்றி (Declarations) ஒப்பந்தங்கள் (Concentions) அல்ல.

ஏனினும் 1989 நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய பிள்ளைகளது "உரிமைகள் பற்றிய ஒப்பந்தம்" மிக ஆணித்தரமான ஒரு சட்டமூலாதாரமாகும். பத்து வருடங்களாக கலந்துரையாடலில் ஈடுபட்டு அதன் பின்னர் 20 நாடுகள் உறுதிப்படுத்திய இச் சட்டமூலாதாரம் 1990 செப்டம்பர் 02ந் திகதி அமுலுக்கு வந்தது. 1993 மே மாதம் 18ம் திகதி வரை இவ் ஒப்பந்தத்தில் 159 நாடுகள் கைச்சாத்திட்டன. 1991 ஜுலை மாதம் 12ம் திகதி இலங்கையும் இவ் ஒப்பந்தத்தின் பங்காளியானது.

இவ்வாறு ஓர் அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை ஏற்பதற்கான காரணமாக அவ் ஒப்பந்தம் அந்த நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டங்களின் மூலங்களில் ஒன்றாக மாறுகிறது. இதன் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான முக்கியமான சட்டமூலாதாரமாக விளங்குவது இவ் ஒப்பந்தமேயாகும். தற்பொழுது இவ் ஒப்பந்தத்தில் இடம் பெற்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் சமூகசேவை அமைச்சும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களமும் இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை (Children's Charter) வெளியிட்டுள்ளன.

## ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அம்சங்களுள் சட்ட அந்தஸ்துள்ள அம்சங்களுக்கு சட்ட அந்தஸ்தினைப் பெறும் விதம்.

ஒரு நாடு இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பின்பு அதில் அடங்கியுள்ள அம்சங்கள் அந்த நாட்டில் சட்டமாக அமுலுக்கு வரும். இச் சட்டங்களைச் செயற்படுத்த அந்த நாடு நடைமுறைப்படுத்தும் செயன்முறைகளான 10 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான தேசியக் கமிட்டியிடம் அறிக்கைப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அறிக்கையை கண்காணிக்கும் முகமாக அதன் தேசிய கமிட்டி குறிப்பிட்ட அந்த நாடுகளின் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பிரயாணங்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் வாயிலாகப் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆவன செய்யும்.

## ஒப்பந்தம் மூலம் உறுதிப்படுத்தப்படும் பிள்ளைகள் தொடர்பான உரிமைகள்.

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான இவ்வொப்பந்தம் முக்கியமான 4 விடயங்களோடு தொடர்புபட்ட பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்க உத்தேசிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் உரிமை - Survival Rights

ஒப்பந்தத்தின் வாயிலாக எதிர்பார்க்கப்படும் முதன்மையானதும் ஆணித்தரமானதுமான பிள்ளையின் உரிமையாக அமைவது உயிர்வாழ்வதற்காக அவர்கள் கொண்டுள்ள சட்டபூர்வமான உரிமையேயாகும். ஓர் அரசாங்கம் இயன்றவரை ஒரு பிள்ளையின் வாழ்வையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். (சுகாதார வசதிகள் சேவைகள், உணவு, சுத்தமான நீரும் வதிவிடமும் உட்படப் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உரித்தாக்கிக் கொள்ளும் உரிமை)

## அபிவிருத்தி உரிமை - Development Rights

தம் சொந்த முழுமையான திறன்களின்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் வாய்ப்பினை வழங்குதல். கல்வியைப் பெறல், ஓய்விலும், பொழுது போக்கிலும் கலாச்சார விவகாரங்களிலும் ஈடுபடுவதற்கான உரிமையை வழங்குதல்.

## பாதுகாப்பு உரிமை - Protection Rights

இவ்வுரிமை உடல் அல்லது உள ரீதியாக பாதிப்புற்ற குழந்தைகள், அனாதைக் குழந்தைகள், பெற்றாரைப் பிரிந்த பிள்ளைகள், வேலைக்காரப் பிள்ளைகள், பாலியல் ரீதியான இம்சைகளுக்கு ஆளான பிள்ளைகளைப் பாதுகாத்தல் ஆகும்.

## பங்கேற்பு உரிமை - Participation Rights

கருத்துக்களை வெளியிடல், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சிந்தித்தல், மனச்சாட்சியின்படி நடத்தல், மத நம்பிக்கைகளைக் கொண்டிருத்தல், சமூகத்தில் செயற்பாடான பொறுப்புகளை வகித்தல் போன்றவை தொடர்பாகப் பிள்ளைகளுக்குரிய உரிமைகள் இதன் மூலம் கருதப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட 4 விடயங்கள் தொடர்பாக பிள்ளைகளது உரிமைகளை பாதுகாப்பதன் பொருட்டு இந்த ஒப்பந்தத்தில் 54 பிரமாணங்கள் அடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியற் சட்டத்தில் இடம்பெற்றுள்ள பிள்ளைகளது உரிமைகள் பற்றிய சட்டங்கள்

குற்றவியற் சட்டம், அனைத்துப் பிரஜைகளுக்கும் எதிராக நடாத்தப்படும் பாதகங்கள் தொடர்பான சட்டமாக இருப்பதோடு அச்சட்டம் இடம்பெற்றுள்ள தண்டக் கோவையில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல சட்டங்கள் இடம்பெற்றுள்ளன. பிள்ளைகளைப் பாலப் பருவத்தினராகக் கருதிக் கொண்டு அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாதகமான குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் சில அடுத்து விபரிக்கப்பட இருக்கின்றன.

## பிள்ளைகளால் இழைக்கப்படும் குற்றங்கள் பற்றிய குற்றவியற் சட்டம்

தண்டக் கோவையின் 75 ம் பிராமணப்படி 8 வயதக்குக் குறைந்த ஒரு பிள்ளையால் இளைக்கப்படும் எச்செயலும் ஒரு குற்றமாகாது.

## தண்ஜக் கோவையின் 76ம் பிரமாணப்படி

ஏதேனும் ஒரே சந்தர்ப்பத்தில் தமது நடத்தையின் தன்மை மற்றும் அதன் பெறுபேற்றை நிச்சயித்துக்கொள்ளல் மட்டில் போதுமான முதிர்ச்சியடைந்த அறிவைப் பெற்றிராத 8 வயதக்கு கூடிய 12 வயதிலும் குறைந்த ஒரு பிள்ளையால் நிகழ்த்தப்படும் எச் செயலும் குற்றமாகாது.

தண் டக் கோவையின் மேலே காட்டப்பட்ட வியாக்கியானத்தின்படி 1 தொடக்கம் 8 வயதினை உடைய ஒரு பிள்ளை, "குற்றம்" என்றால் என்னவென்று விளங்கிக் கொள்ள இயலாத ஒரு பாலர் பருவத்தவரே ஆவர். மேலும் வயது 12 ஆக இருப்பினும் எந்த ஒரு பிள்ளையும் தனது நடத்தையின் தூன்மையை அல்லது அதன் பெறுபேற்றைப் பற்றிய விளக்கத்தை பெற்றுக்கொள்ளத்தக்க போதுமான அளவு முதிர்ச்சி பெற்ற அறிவு இல்லாவிடின் அத்தகைய பிள்ளையும் குற்றம் எனப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவென விளங்கிக் கொள்ள இயலாத ஒரு பாலர் பருவத்தவரே ஆவார்.

## விளக்கம் :

5 தொடக்கம் 8 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள் 8 தொடக்கம் 12 வயதுக்கு இடைப்பட்டபோதும் போதுமான முதிர்ச்சியான அறிவற்ற பிள்ளைகளும் பாடசாலைகளில் கற்கிறார்கள். அவ்வாறான வயதுப் பிரிவுகளை உடைய பிள்ளைகள் " குற்றம் " என்றால் என்னவென விளங்கிக்கொள்ள முடியாமையினால் அவைகள் செய்யும் எச்செயல்களும் குற்றமாக கருதப்படமாட்டாது என தண்டக் கோவை குறிப்பிடுகிறது .எனவே இவ் வயதுப்பகுப்புக்களைச் சார்ந்த பாடசாலைப்பிள்ளைகள் நிகழ்த்தும் செயல்கள், குற்றம் எனக் கருதி அவர்களுக்கு எளிய அல்லது கடுமையான தண்டனைகளை வழங்குதல் நியாயம் தானா என்பதை பற்றி சிந்திக்க தண்டக் கோவையின் மேலே இடம்பெற்ற பிரமாணம் பயன்படுகிறது

## பிள்ளைகளுக்கு உடல் ரீதியான தண்டனைகளை (CORPORAL PUNISHMENT) வழங்குதல் பற்றிய சட்டம்

பிள்ளைகளது நடத்தையில் விருத்தி மற்றும் ஒழுக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக அவர்களது நலனைக் கருத்தில் கொண்டு தண்டனை வழங்க பெற்றார், ஆசிரியர், சட்ட பூர்வமாக பாதுகாவலர் ஆகியோருக்கு சட்டப்படி உரிமை இருப்பினும் அவ்வாறான தண்டனைகள் நியாய பூர்வமாக இருக்க வேண்டியதோடு பொதுவாக வழக்கில் உள்ள சட்டத்தின் வரையறைகளை மீறிச் செல்லாதிருக்க வேண்டும் என்பது தெளிவான விடயமாகும் பாடசாலை மாணவருக்கு தண்டனை வழங்குகையில் ஆசிரியர்கள் கொண்டுள்ள சட்ட பூர்வமான அதிகாரமும் அவ் அதிகாரத்தை கையாளும் விதமும் மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்படுகின்றன. 1929ம் ஆண்டின் அரசாங்கப்பாடசாலை தொடர்பான யாப்பின் 23வது பிரமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மீது உடல் ரீதியான தண்டனை தலைமை ஆசிரியரால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் எனினும் ஒரு கலவன் பாடசாலையின் மாணவிகளுக்கு தண்டனை வழங்கல், ஆண் ஆசிரியரைப் பொறுத்த வகையில் முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.

உடல் ரீதியான தண்டனை வழங்கப்படும் எல்லாச் சந்தர்ப்பங்பகளிலும் என்ன குற்றத்திற்காக அத்தண்டனை வழங்கப்பட்டது என்பது பற்றியும் தண்டனையாக அளிக்கப்பட்ட பிரம்படிகளின் எண்ணிக்கை பற்றியும் ஓர் அறிக்கையைத் தயாரித்து வைக்க வேண்டும்

எந்த ஒரு குற்றத்திற்காகவும் அளிக்கப்படும் பிரம்படிகளின் எண்ணிக்கை நான்குக்கு மேற்படாது இருக்க வேண்டும். உள்ளங்கையில் மட்டுமே அவ்வாறான பிரம்படிகள் இடம்பெறல் வேண்டும் தண்டனை அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே பிரம்பு வெளியில் எடுக்கப்படல் வேண்டும் அப்பிரம்பு ஆசிரியரது மேசையின் மீது அடிக்கடி வைக்கப்படல் கூடாது

உடல் ரீதியான தண்டனை வழங்கப்படல் தொடர்பாக தற்போது அமுலில் உள்ள சுற்று நிருபம் பின்வருமாறாகும்.
1961ம் ஆண்டின் 26ம் இலக்கச் சுற்று நிருபம்

எனது இலக்கம் :**NSAA/ 158**
21 யூலை 1961,
கல்வித் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு - 02

அரசாங்க
மற்றும் பணிப்பாளர்களது
நிருவாகத்திற்கு உட்பட்ட
அனைத்து பாடசாலைகளின்
அதிபர்கள் மற்றும் தலைமை
ஆசிரியர்களுக்கு

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்கல் உங்களது ஆசிரியர் குழாத்தின் அனைவரிடையேயும் விநியோகிப்பதற்காக; உடல் ரீதியான தண்டனை வழங்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான **E** 36ம் இலக்கம் மற்றும் 21.12.1927ம் திகதி கொண்ட சுற்று நிருபத்தில் இருந்து பெற்றுக் கொண்ட ஒரு பகுதி இத்தோடு அனுப்பப்பட்டுள்ளது.

**D.G** குலதுங்க

## கல்விப்பணிப்பாளருக்காக

உடல் ரீதியான தண்டனைகள் தொடர்பான **E** 36 ம் இலக்கம் கொண்ட 21.12.1927 திகதி சுற்று நிருபத்தில் இருந்து பெறப்பட்ட பகுதி உடல் ரீதியான தண்டனைகளை கைக் கொள்ளாது ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணுவதற்கு முடியாமை ஓர் ஆசிரியரது திறமை இன்மையை தெட்டத் தெளிவாக காட்டும் அடையாளமே என்பதை ஆசிரியரிடம் நினைவூட்ட விரும்புகிறேன். தற்போது கூட கல்வியாளினது தமக்கு நூதனமானதென கருதும் தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் விசேடமாகப் பொருத்தமற்றதே ஆகும்.

மாணவரது பாடசாலை வரவை தவிர்க்கத் தக்கதாக அல்லது பாடசாலைமட்டில் பெற்றார் கொண்ட நல் அபிப்பிராயத்தில் பங்கம் விளைவிக்கத் தக்கதான உடல் ரீதியான தண்டனைகளை பாடசாலைகளில் வழங்காதீர்கள்.

*உடல் ரீதியிலான தண்டனைகள் தொடர்பான பின்வரும் கட்டளைகளை கவனமாக பின்பற்ற வேண்டும்*

அ) பின்வரும் விடயங்கள் மட்டில் அல்லாத விடத்து உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் கூடாது

1. பாரதூரமான தகாத நடத்தை
2. வேறு தண்டனைகளை

வழங்கியபோதும் எப்பெறுபேற்றையும் பெற இயலாதவாறு தொடர்ந்தும் சோம்பலோடு காலங்கழித்தல், கற்றலின் மட்டில் கவனஞ் செலுத்தாமை போன்ற பொதுவான விடயங்களுக்காக உடல் ரீதியான தண்டனை அளித்தல் கூடாது தலைமை ஆசிரியர் மட்டுமே உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எனினும் கலவன்பாடசாலைகளில் கற்கும் மாணவிகளுக்கு உதவி ஆசிரியைகள் மட்டுமே உடல் ரீதியான தண்டனைகளை அளித்தல் வேண்டும். ஆண் ஆசிரியர்கள் மாணவிகள் மீது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் முற்றாகவே தடைசெய்யப்படுகின்றது.

(இ) உடல் ரீதியிலான தண்டனைகள் வழங்கப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதன்பொருட்டு பயன்படுத்திக் கொள்ளும் விசேடமான புத்தகத்தில் பிள்ளையால் செய்யப்பட்ட குற்றம் மற்றும் அளிக்கப்பட்ட அடிகளின் எண்ணிக்கை என்பவற்றை குறித்தல் வேண்டும்

(ஈ) மாணவ, மாணவியரது உள்ளங்கைகளில் பிரம்பினால் உடல் ரீதியிலான தண்டனை அளிக்கப்படவேண்டும் அவ்வாறான அடிகளின் எண்ணிக்கை எவ்வகையிலேனும் நான்கிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.மிகச் சிறிய பாலருக்கும் மெலிந்த உடல் உள்ள மாணவ,மாணவியருககும் உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் கூடாது. மாணவ, மாணவியரை ஒருபோதும் கைகளால் தாக்குதல் கூடாது அவர்களை கட்டிவைத்தல் கூடாது.

(உ) பிரம்பை பாடசாலை மேசையின் மீது வைத்திருத்தல் கூடாது. அது ஆசிரியரது அறையிலே வைக்கப்படுவதோடு தேவைப்படும் போது மட்டும் பயன்படுத்தத்தக்கவாறு வெளியே எடுக்கப்படல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் மற்றும் இளம்பராயத்தவர் தொடர்பான 1956ம் ஆண்டு 48ம் இலக்கச் சட்டம்

(தீமை பயக்கும் பிரசுரங்கள்)

இச்சட்டத்தின் இரண்டாம் பிரமாணப்படி பிள்ளைகள், இளம் பராயத்தினர் ஆகியோரை அடையத்தக்க பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்ற தீமை பயக்கும் வெளியீடுகளை பிரசுரித்தல், விற்பனைசெய்தல் என்பன குற்றமாகும். பிள்ளைகள், இளம் பராயவத்தவர்கள் மட்டில் தீமை பயக்கும் வெளியீடுகளாக கருதப்படுவன எவை?

அத்தகைய வெளியீடுகளை அவர்களிடம் வினியோகிக்கும் குற்றங்கள் மற்றும், குற்றங்களுக்கான தண்டனைகள் என்பன இக்கட்டளையால் விபரிக்கப்படுகின்றன. பிள்ளைகளுக்கு தீங்கு பயக்கும் வெளியீடுகள் பற்றிய சட்டங்கள் தொடர்பான பகுப்பாய்வின் போது 1927ம் ஆண்டு ஆபாச வெளியீடு சம்பந்தப்பட்ட கட்டளைச்சட்டத்தின் விதிகளும் பிரதானமானவையே.

## பெண்கள், இளம் பராயத்தினர் ஆகியோரை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பான 1973ம் ஆண்டு 28ம் இலக்கச் சட்டம்

பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதினை உடைய பிள்ளைகளை வேலையில் ஈடுபடுத்துவதை தவிர்த்தல். வேலைகளில் ஈடுபட்டுள்ள இளம் பராயத்தினரின் நலன் கருதி தொழில் வழங்குனர்கள் விசேட சலுகைகளையும் பாதுகாப்பையும் வழங்குதலைக் கட்டாயமாக்கல் போன்ற விடயங்களோடு தொடர்புபட்ட பல சட்டங்கள் இக்கட்டளையில் குறிப்பிடப் - பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக நிறுவனங்களில் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர் தொடர்பான 1977ம் ஆண்டு 12ம் இலக்கச் சட்டம்

இச்சட்டத்தின் 10ம்பிரமானப்படி 14 வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளையை ஒருவர்த்தக நிலையத்தில் அல்லது அலுவலகத்தல் வேலையில் ஈடுபடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது கட்டளையின் 10(02) பிரமாணப்படி ஒரு வர்த்தக நிலையத்தில் அல்லது அலுவலகத்தில் சேவையிலுள்ள 14 தொடக்கம் 16 வயதுடைய இளம்பராயத்தவரை வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய சட்டபூர்வமான விதிகள் அதில் விபரிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் சீர்திருத்த சட்ட மூலத்தில் முன்வைக்கப் பட்டுள்ள பிள்ளைகளின் விசேட உரிமைகள்

இலங்கை குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் அத்தியாயம் 03 இன் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் என்ற பகுதியின் 22ம் சரத்தில் பிள்ளைகளுக்கான விசேட உரிமைகள் பற்றி பின்வருமாறு இடம்பெற்றுள்ளன.

(01) அ பிறந்ததில் இருந்து பெயர் ஒன்றை கொண்டிருப்பதற்கு

ஆ கொடுமைப்படுத்தல், புறக்கணிக்கப்படல் அல்லது இழிவு படுத்தல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்பதற்கு அத்துடன்

இ மேலும் கணிசமான அநீதி விளைவிக்கப்படுமானால் பிள்ளைகளை பாதிக்கப்படுகின்ற குற்றவியல் நடவடிக்கைகளில் அப்பிள்ளைக்கு அரசினால் அரச செலவில் சட்டத்தரணி ஒருவர் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02) ஒவ்வொரு பிள்ளைக்கும்

அ. குடும்பக் கவனிப்புக்கு அல்லது பெற்றோரர் கவனிப்புக்கு அல்லது குடும்பசூழலிலிருந்து பிரிக்கப்படும் போது பொருத்தமான மாற்றுக் கவனிப்புக்கு அத்துடன்

ஆ. அடிப்படை போசனைக்கு, உறைவிடத்துக்கு, அடிப்படை சுகாதாரக் கவனிப்புச் சேவைகளுக்கு மற்றும் சமூக சேவைகளுக்கு உரிமையுண்டு

(03) இரண்டாம் பந்தியினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் படிப்படியாக செயலுருப்படுத்தி அடையும் நோக்கத்துடன், அரசு அதற்கு கிடைக்கக் கூடியதாக உள்ள வள வாய்ப்புக்களை கொண்டு நியாயமான சட்டவாக்க நடவடிக்கைகளையும் வேறு நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்

(04) பிள்ளைகள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும் அவை பகிரங்க அல்லது தனியார் சமூக நலன்புரி நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்படினும் நீதிமன்றங்கள் நிர்வாக அதிகார சபையினால் அல்லது சட்டவாக்கக் குழுக்களினால் பொறுப்பேற்கப்படினும் சரி. பிள்ளைகளின் உயரிய நலனே அதி முக்கியத்துவம் வாய்ந்திருத்தல் வேண்டும்

(05) பிள்ளைகளின் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அடிமைப்படுத்தும் பதார்த்தங்களின் நுகர்வினால் வரும் எதிர் விளைவுகளில் இருந்தும் அத்துடன் சாத்தியமான அளவுகளுக்கு அத்தகைய பதார்த்தங்களின் ஊக்குவிப்பிலிருந்தும் பாதுகாக்கப்பட்ட ஒரு சூழலில் வளருவதற்கான உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் இருத்தல் வேண்டும்.

(06) ஐந்து வயதிற்கும் பதினாங்கு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொன்றிற்கும் அரசினால் வழங்கப்படும் இலவசக் கல்வி வாய்ப்பு கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07) ஆபத்து விளைவிக்கக் கூடிய செயற்பாடு எதிலும் சிறுவர் எவரும் ஈடுபடுத்தல் ஆகாது.

(08) இவ் உறுப்புரையினால் ஏற்று அங்கீகரிக்கப்படும் உரிமைகள், இவ் அத்தியாயத்தின் கீழ் பிரசையொருவர் என்ற முறையில் அல்லது ஆள் ஒருவர் என்ற முறையில் பிள்ளை ஒன்று உரித்துடையதாய் இருக்கின்ற வேறு ஏதேனும் உரிமைக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்

(09) இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக "பிள்ளை" என்பது 18 வயதுக்கு கீழ் ஆள் ஒருவரென பொருள்படும் எனவே சிறுவர்களின் நலன்களை பேணுதலின் அரசின் கொள்கைகள், மற்றும் அதன் அக்கறைகள் என்பன இதன் மூலம் நன்கு தெளிவாகுகின்றது. இவையாவற்றிற்கும் மேலாக சர்வதேச மட்டத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமை பற்றிய ஏற்றுக் கொள்ளப்பட்ட சமவாய உறுப்புரைகளை இயன்றளவா நடைமுறைப்படுத்துதல்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

ஜனாதிபதி செயலணியின் சிபார்சுகளை செய்ற்படுத்துவதை நோக்கமாக வைத்து 1998 நவம்பர் மாதம் 12ம் திகதிஅன்று சிறுவர்பாதுகாப்பு அதிகாரசபையுடன் சம்பந்தப்பட்ட சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது பாதுகாப்பு அதிகார சபையின் பணிகளாவன

அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதுடன், சிறுவர் துஷ் பிரையோகத்தை தடுத்தல், பலியானவர்களைப் பாதுகாத்தல், அவர்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்றவை சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு தேசிய கொள்கையை வகுத்தல். சிறுவர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை தீர்மானித்தலும், சிறுவர் துஷ்பிரையோகக் கட்டுப்பாட்டின் முன்னேற்றம் பற்றியும் குற்றவியல் தண்டனைகள். நடைமுறைகள் என்பன பற்றியும் புலனாய்வு செய்தல். சுற்றுலா கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு பிரச்சனையாக இருக்கலாம் என கருதப்படக் கூடிய அல்லது இருக்கின்ற பிரிவுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துதல்.சிறுவர் துஷ்பிரையேகத்தை தடுப்பதற்குத் தேவையான தேசிய கொள்கைகளை சட்டமாக்குவதற்கான சட்ட நிர்வாக திருத்தங்களையும் வேறு திருத்தங்களையும் செய்தல். அரசாங்கத்திற்று பொருத்மான ஆலோசனைகளை வழங்குதல்.

## பொது மக்களிடையே புரிந்துணர்வை எற்படுத்துதல்

சிறுவர்கள் துஷ்பிரரயோகம் ஒரு மறைவான குற்றமாகவும் இருக்கின்றது அனேகமான சம்பவங்கள் முற்றாக அறிவிக்கப்படுவதில்லை சிறுவர் துஷ்பிரரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு 444444 என்ற தொலைபேசி இலக்கமும் த.பெ. இல. 1595ம் என்நேரமும் பொதுமக்களுக்காக திறந்த வைக்கப்பட்டுள்ளன.

## சிறுவர்களுக்கான கட்டாய கல்வி முறை

கல்வி என்பது சகல சிறார்களின் அடிப்படை உரிமையாகும் பாடசாலைக்கு செல்லக்கூடிய வயதுடைய 14 வீதமான பிள்ளைகள் தற்போது முறையான கல்வியை பெற்றுக்கொள்வதில்லை குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ள தாய்மாரின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பதிலாக வீட்டு வேலைகளைச் செய்வதற்காக அமர்த்தப்படுகின்றனர். இன் நிலைமையை சமாளிப்பதற்காகவே 14 வயதிற்குக் கீழ்ப்பட்ட அனைத்துச் சிறுவர்களையும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இது பெருந்தோட்டப் பகுதிகளின் சிறுவர்களது கல்வி வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கான தண்டனைகள்

தற்போது 12 வீடுகளுக்கு ஒருவர் என்ற அளவில் 14 வயதிற்கு கீழ்ப்பட்ட ஏழைச்சிறார்கள் வீட்டுப்பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் துஷ்பிரயோகத்திற்கும் சில வேளைகளில் சித்திர வதைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என பத்திரிகை அறிக்கைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவ்வாறு சிறுவர்களை கொடுமைப்படுத்துபவர்கள் என குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு குறைந்த பட்சம் 2 வருடங்கள் முதல் ஆகக் கூடியது 10 வருடங்கள் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது சிறைத்தண்டனையுடன் கூடிய அபராதம் போன்ற புதிய தண்டனைகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன

சுமார் 10 சதவீதமான சிறுவர்களும் 20 சதவிதமான சிறுமியரும் மிக இளவயதிலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. வீதியோரச் சிறுவர்கள் வறுமை குடும்ப முறிவுகள் போன்றவற்றினால் விபச்சாரத்தில் ஈடுபடும்படி வற்புறுத்தப்படுகின்றனர். அத்துடன் பணம் பெற்றுக்கொள்வதற்காக சட்டவிரோதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சிறார் துஷ்பிரயோகம் செய்வோரின் தொகை நாளாந்தம் அதிகரிப்பதால் இக்குற்றங்களுக்கான புதிய சிறைத்தண்டனையானது குறைந்தது 5 வருடங்களாகவும், ஆகக் கூடியது 20 வருடங்களாகவும், அத்துடன் ஒரு அபராதம் அல்லது சிறைவாசத்ததுடன்கூடிய அபராதமாகவும் அதிகரிக்கப்படுட்டுள்ளது.

விடயம் தொகுப்பு :

**எஸ். சரவணபவானந்தன்**
நிர்வாகச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் எங்களுக்கு



- சிறுவர்களாகிய எமக்கு உரிமைகள் உண்டு.
- எமது உரிமைகள் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்
- நாம் அனைவரும் கல்வி பெற உரிமையுடையவர்கள்
- நாம் எல்லோரும் ஒன்றுகூடிக் கற்றுக் கொள்வோம்.
- நாம் எல்லோரும் சேர்ந்து விளையாட வேண்டும்.
- நாம் இன, மத வேறுபாடுகளின்றி எல்லோரும் ஐக்கியப்படுவோம்
- சிறுவர்களாகிய எமக்கு வேலைசெய்ய விருப்பமில்லை.
- எம்மை வேலைக்காரர்களாக வெளியிடங்களுக்கு அனுப்பக்கூடாது.
- எம்மை போதைவஸ்து விற்பனை செய்ய அனுப்பக் கூடாது.
- சிறுவர்களாகிய நாம் போருக்குச் செல்லக்கூடாது.
- பெரியவர்கள் செய்யும் செயல்களை எம்மைக் கொண்டு செய்விக்கக்கூடாது.
- நாங்கள் எல்லோரும் ஆடவும் பாடவும் விரும்புகிறோம்.
- சிறுவர்கள் மற்ற சிறுவர்களுக்கு அன்பு செலுத்த வேண்டும்.
- நாங்கள் எதிர்காலத்தின் பாதுகாவலர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளை வேலைக்கமர்த்தல்

- உலகில் 250 மில்லியன் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.
- ஆகக் குறைந்தது 125 மில்லியன் 5றகும் 14 வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகள் முழுநேரக் குழந்தை தொழிலாளர்கள் ஆவர்.
- இவர்களில் 1/3 பங்கினர் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுகின்றனர்.
- இலங்கையில் 5 வயது முதல் 17 வயது வரையான 431669 பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை.
- இவர்களில் 2, 34, 617 பிள்ளைகள் வருமானம் ஈட்டும் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

(1999 குடிசன புள்ளிவிபரத் திணைக்கள ஆய்வு அறிக்கை)

**கல்வியானது:**

- கட்டாயமான
- இலவசமாக
- எட்டக் கூடியதாக
- தரமாக
- ஏற்புடையதாக
- பிள்ளைகளுக்கும் எட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

வேலைக்கமர்த்தப்படும் பிள்ளைகளின் கல்வி உரிமை மறுக்கப்படுவதால் அவர்கள் தமது குழந்தைப் பருவத்தை அனுபவிக்க முடியாதவர்களாகவும் தமது பெற்றோர் உறவினர்களின் அரவணைப்பை பெற முடியாதவர்களாகவும் இறுதியில் கல்வி கிடைக்காது சூனியமானதொரு எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள்.

**[இத்திட்டத்தில் சர்வதேசக் கல்வியகம், யூனிசெப், யுனஸ்கோ, ஐ.ஈ.பி.சி, சர்வதேச தொழில் தாபனம் ஆசியன் இணைந்து செயற்படுகின்றன.]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org